# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு.V.M.ராஜேந்திரன் பி.இ,**

**ந.க.எண்.783/2012/செம3** **நாள். 8.12.2014**

பொருள் கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம் - காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், பெருமாட்டுநல்லூர் கிராமம், சர்வே எண்கள்.**16**/4A, 4B; **65**/4, 5A, 5B; **76**/4, 5; **77**/1A, 1B, 2B, 2C1, 2C2, 3A, 3B; **78**/1, 2; **79**/1, 2; **80**/1, 2; **81**/1, 2; **82; 83; 85; 86**/1B, 1C, 2A, 2B; 87/1A, 1B1, 1B2, 2A, 2B, 2C; **88**/1, 2, 3; **89**/2, 3A, 3B, 3C, 4A, 4B; **90; 95**/4– ல் 146160.07 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் ஏற்கனவே மனை ஒப்புதல் வழங்கப்பட்டது - அதில் உத்தேசித்த தொகுப்பு குடியிருப்புகள் இசைவு அளிக்கப்பட்டது இரத்து செய்யப்பட்டு திருத்திய மற்றும் கூடுதல் கட்டுமானத்திற்கு தற்பொழுது பலமாடி கட்டிடப் பகுதியாக அறிவிப்பு செய்யப்பட்ட மனையிடத்திற்கு மனை ஒப்புதலும், அம்மனையிடத்தில் 212811.83 ச.மீ கட்டிட பரப்பில் அமையும் பலமாடி குடியிருப்புகள், Club House -1, 2 & Shop உபயோக கட்டுமான வரைபடங்களுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளித்தல் - குறித்து.

பார்வை
1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் நடவடிக்கைகள் நக.எண்.26001/2013/ சிபி நாள்.10.11.2014
2. மனுதாரர் M/s.Shriprop Structure Pvt Ltd சென்னை என்பவரது மனு நாள். 11.09.2013
3. தலைவர், பெருமாட்டுநல்லூர் ஊராட்சி மன்றம் கடிதம் நாள்.20.11.2013
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணை கடிதம் நக.எண்.15592/2009/சிபி நாள்.07.12.2009
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணை கடிதம் நக.எண்.26001/2013/சிபி நாள்.14.05.2014 (பலமாடி கட்டிடப் பகுதியாக அறிவிப்பு)
6. தமிழ்நாடு அரசிதழ் எண்.21, பகுதி -VI, பிரிவு - 1, நாள்.04.06.2014
7. நகர் ஊரமைப்பு துறை கோப்பு எண்.2840/13/சிபி, பலமாடி கமிட்டி கூட்டம் நடைபெற்ற நாள்.20.06.2014
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.7486/2009/ பிர1, நாள்.16.04.2009
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.21075/09/ பிர2, நாள்.04.04.2012
10. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.28.03.2012
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.12544/2014/சிபி நாள்.04.07.2014
12. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.18.11.2014-ல் பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி, தேசிய சிறுசேமிப்பு பத்திரம் நகல் செலுத்தக் கோரியது)

13. மனுதாரர் M/s.Shriprop Structure Pvt Ltd அவர்களின் கடிதம் நாள். 01.12.14 & 08.12.14 முறையே பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான விவரம் (ம) அடிப்படை உட்கட்டமைப்பு வசதி கட்டணத் தொகை, .நன்னிலைவரி, தேசிய சிறுசேமிப்பு பத்திரம் ஆகியன செலுத்தியதற்கான விவரம்)

******

**உத்தரவு**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், பெருமாட்டுநல்லூர் கிராமம், சர்வே எண்கள்.**16/4A**, 4B; **65/4**, 5A, 5B; **76/4**, 5; **77/1A**, 1B, 2B, 2C1, 2C2, 3A, 3B; **78/1**, 2; **79/1**, 2; **80/1**, 2; **81/1**, 2; **82; 83; 85; 86/1B**, 1C, 2A, 2B; 87/1A, 1B1, 1B2, 2A, 2B, 2C; **88/1**, 2, 3; **89/2**, 3A, 3B, 3C, 4A, 4B; **90; 95/4**– ல் 146160.07 சதுர மீட்டர் பரப்பளவிற்கு மனை ஒப்புதல் மற்றும் அதில் உத்தேசித்த தொகுப்பு குடியிருப்புகள் Block –A, B, C, D, E, F கொண்ட மொத்தம் 51 பிளாக்குகள், Club house – I, II & Shop உத்தேசங்களுக்கு பார்வை 4- ல் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயலாணை கடிதத்தில் இசைவு அளிக்கப்பட்டது இதன் மூலம் இரத்து செய்யப்பட்டு, தற்போது மேற்குறிப்பிட்ட உத்தேச மனையிடத்தில் பெறப்பட்ட திருத்திய மற்றும் கூடுதல் கட்டுமானத்திற்கு பார்வை 5-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயலாணை கடிதத்தில் பலமாடி கட்டிடப் பகுதியாக அறிவிப்பு செய்யப்பட்ட மனையிடத்தில் 212811.83 ச.மீ கட்டிட பரப்பில் அமையும் பலமாடி குடியிருப்புகள், Club House -1, 2 & Shop சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையிடத்தில் கீழ்கண்டவாறு உபயோக கட்டுமானங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**Area Statement (FSI area in Sq.m)**

| Details of Tower | Stilt floor | Ground floor | 1st floor | 2nd floor | 3rd floor | 4th floor | 5th floor | 6th floor | 7th floor | Terrace floor | No .of Dwelling unit |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Tower -I | -- | -- | 2461.12 | 2461.12 | 2461.12 | 2461.12 | -- | --- | --- | --- | 36 dwelling unit per floor x 4floor |
| Tower -2 | -- | -- | 2568.77 | 2568.77 | 2568.77 | 2568.77 | -- | --- | --- | --- | 24 dwelling unit per floor x 4floor |
| Tower -3 | -- | -- | 1734.31 | 1734.31 | 1734.31 | 1734.31 | -- | --- | --- | --- | 16 dwelling unit per floor x 4floor |
| Tower -4 | -- | -- | 2986.37 | 2986.37 | 2986.37 | 2986.37 | -- | --- | --- | --- | 24 dwelling unit per floor x 4floor |
| Tower -5 | -- | -- | 2011.12 | 2011.12 | 2011.12 | 2011.12 | -- | --- | --- | --- | 16 dwelling unit per floor x 4floor |
| Tower -6 | -- | -- | 1987.66 | 1987.66 | 1987.66 | 1987.66 | -- | --- | --- | --- | 23 dwelling unit per floor x 4floor |
| Tower -7 | -- | -- | 1981.70 | 1981.70 | 1981.70 | 1981.70 | -- | --- | --- | --- | 23 dwelling unit per floor x 4floor |
| Tower -8 (LIG) | -- | -- | 777.56 | 777.56 | 777.56 | 777.56 | 777.56 | 777.56 | 777.56 | --- | 16 dwelling unit per floor x 7floor |
| Tower -9 | -- | -- | 617.76 | 617.76 | 617.76 | 617.76 | 617.76 | 617.76 | 617.76 | --- | 8 dwelling unit per floor x 7floor |

| Details of Tower | Stilt floor | Ground floor | 1st floor | 2nd floor | 3rd floor | 4th floor | 5th floor | 6th floor | 7th floor | Terrace floor | No .of Dwelling unit |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Tower -10 | | 545.4 | 757.56 | 757.56 | 757.56 | 757.56 | 757.56 | 757.56 | --- | | 8 dwelling unit per floor x 6 floor |
| Tower -11 (LIG) | -- | -- | 777.56 | 777.56 | 777.56 | 777.56 | 777.56 | 777.56 | 777.56 | --- | 16 dwelling unit per floor x 7 floor |
| Tower -12 | -- | -- | 1971.20 | 1971.20 | 1971.20 | 1971.20 | -- | --- | --- | --- | 16 dwelling unit per floor x 4floor |
| Tower -13 | -- | -- | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | | 10 dwelling unit per floor x 7 floor |
| Tower -14 | -- | 721.3 | 983.30 | 983.30 | 983.30 | 983.30 | 983.30 | 983.30 | --- | | 12dwelling unit per floor x 6 floor |
| Tower -15 | -- | -- | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | --- | 10 dwelling unit per floor x 7 floor |
| Tower -16 | -- | -- | 1713.70 | 1713.70 | 1713.70 | 1713.70 | -- | --- | --- | --- | 16 dwelling unit per floor x 4floor |
| Tower -17 | -- | -- | 1914.50 | 1914.50 | 1914.50 | 1914.50 | -- | --- | --- | --- | 18dwelling unit per floor x 4 floor |
| Tower -18 | -- | -- | 1971.20 | 1971.20 | 1971.20 | 1971.20 | -- | --- | --- | --- | 16 dwelling unit per floor x 4 floor |
| Tower -19 | -- | -- | 1914.50 | 1914.50 | 1914.50 | 1914.50 | -- | --- | --- | --- | 18 dwelling unit per floor x 4 floor |
| Tower -20 | -- | -- | 1914.50 | 1914.50 | 1914.50 | 1914.50 | -- | --- | --- | --- | 18 dwelling unit per floor x 4 floor |
| Tower -21 | -- | -- | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | --- | 12 dwelling unit per floor x 7 floor |
| Tower -22 | -- | -- | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | --- | 16 dwelling unit per floor x 7 floor |
| Tower -23 | -- | -- | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | --- | 12 dwelling unit per floor x 7 floor |
| Tower -24 | -- | -- | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | 1006.16 | --- | 12 dwelling unit per floor x 7 floor |
| Tower -25 | -- | -- | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | 1105.66 | --- | 10 dwelling unit per floor x 7 floor |

| Details of Tower | Stilt floor | Ground floor | 1st floor | 2nd floor | 3rd floor | 4th floor | 5th floor | 6th floor | 7th floor | Terrace floor | No .of Dwelling unit |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Tower -26 | -- | -- | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | --- | 16 dwelling unit per floor x 7 floor |
| Tower -27 | -- | -- | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | 1415.66 | --- | 16 dwelling unit per floor x 7 floor |
| Club -1 | -- | 479.09 | 416.66 | -- | -- | -- | --- | --- | --- | --- | --- |
| Club -2 | -- | 949.09 | 576.66 | -- | -- | -- | --- | --- | --- | --- | --- |
| Shop | -- | 445.00 | 424.38 | -- | -- | -- | --- | --- | --- | --- | --- |

OSR :- 14616.0 Sq.m

மேற்கண்ட உத்தேச பலமாடி தொகுப்பு குடியிருப்புகள், LIG, Club house, Shop உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல் நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 47-ன்படி சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன், பார்வை 1-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் முன்னிலை கடிதத்தில் கட்டிட அனுமதி வழங்க கட்டிட வரைபடங்களுக்கு கவ/ந.ஊ.இ.எண்.**120/2014** என எண்ணிட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 10-ல் கண்ட அரசாணையின்படி அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதி கட்டணம் மற்றும் நன்னிலைவரி ஆகிய கட்டணங்களை அரசுக்கு செலுத்தக்கோரியும் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிட இடத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யக் கோரியும், பார்வை 12-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பார்வை 13-ல் கண்ட மனுதாரரின் கடிதங்கள் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய I & A கட்டணம் ரூ.2,83,08,000/- மற்றும் நன்னிலை வரி ரூ.71,000/- ஆகியவை செலுத்தப்பட்டதற்கான விவரமும், பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான தானப்பத்திர நகல் ஆகியன பெறப்பட்டுள்ளதால், மேற்படி உத்தேச மனையிடத்திற்கு **'A1'** முதல் **'A45'** வரை என எல்லையிட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச பலமாடி தொகுப்பு குடியிருப்புகள், LIG, Club house, Shop உபயோக கட்டுமான வரைபடங்களுக்கு கவ/நஊதுஇ(செம)எண்.**65('1' முதல் '33' வரை)/2014** என எண்ணிட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு உள்ளாட்சிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. The Project proponent / Applicant shall not commence any activity, excepting fencing of the site and construction of temporary shed for guard, without obtaining Environmental clearance under the EIA Notification, 2006 from the State Level Environment Impact Assessment Authority or the Ministry of Environment and Forests, Government of India, as applicable to the project, as per the threshold limits, Any violation from the above requirement is liable for action under section 19 of the Enviroment (Protection) Act, 1986.

2. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்படவேண்டும்.
3. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
4. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்த பெறப்பட்ட தடையின்மைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்படவேண்டும்.
5. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant/developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
6. Applicant should obtain consent form Tamil Nadu Pollution Control Board under section (25) of the water Act 1974 for discharge of sewage
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்பபத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களின் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரோனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"
8. The conditions metioned in NOC of Executive Engineer (PWD) should be followed.

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச பலமாடி தொகுப்பு குடியிருப்புகள், LIG, Club house, Shop உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்படவேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்படவேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்படவேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்புச் சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.

9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு ஊராட்சி மன்றத் தலைவர், பெருமாட்டுநல்லூர் ஊராட்சி அவர்களை அனுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர், பெருமாட்டுநல்லூர் ஊராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8.12.14

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ).
செங்கல்பட்டு-1

8/12

8/12/14

**இணைப்பு**
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் - 2 தொகுப்பு

**பெறுநர்**
ஊராட்சி மன்றத் தலைவர்,
பெருமாட்டுநல்லூர் ஊராட்சி
செங்கல்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**நகல்**
M/s.Shriprop Structures Pvt Ltd
Lakshmi Neela Rite Choice Chamber,
1st floor, New No.9, Bazullah Road,
T.Nagar, Chennai – 17

**பெருமாட்டுநல்லூர் ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)**
**அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை - திரு.மு.சிவகலைச்செல்வன்**

**ந.க.எண்.** 2285 / 2017/ அ1 — நாள் - 28.12.2017

பெருமாட்டுநல்லூர் ஊராட்சி தேதி 28/12/2017 காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்

பொருள் — **கட்டிட வரைபட அனுமதி நீட்டிப்பு** - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - பெருமாட்டுநல்லூர் ஊராட்சி, பெருமாட்டுநல்லூர் கிராமம், நில அளவை எண் - 16/4A,4B 65/4,5A,5B, 76/4,5, 77/1A,1B,2B,2C1A,2C1B,2C1C,2C1D,2C1E, 2C1F,2C2,3A,3B, 78/1,2 79/1,2, 80/1,2, 81/1,2 82, 83, 85, 86/1B,2A,2B,1C 87/1A,1B1,1B2,2A,2B,2C, 88/1,2,3 89/2,3A,3B,3C,4A,4B, 90 & 95/4 - 146160.07 ச.மீ நில பரப்பளவு இடத்தில் 212811.83 ச.மீ. கட்டிட பரப்பில் அமையும் பலமாடி உத்தேச குடியிருப்புகளுக்கு வரைபட அனுமதி மற்றும் கட்டிடங்கள் கட்ட கட்டுமான அனுமதி நீட்டிப்பு வழங்கி உத்தரவிடல்.

பார்வை
1) அரசு ஆணை எண். 255 நாள் 19.08.1997.
2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் ந.க.எண் - 783/ 2012 / செம3 நாள் - 08.12.2014
3) இவ்வலுவலக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ( ZONE - 2 ) அவர்களின் ஆய்வறிக்கை நாள் - 26.12.2017

*********

**உத்தரவு**

M / S Shriprop Structures Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு பெருமாட்டுநல்லூர் ஊராட்சி, பெருமாட்டுநல்லூர் கிராமம், நில அளவை எண் - 16/4A,4B 65/4,5A,5B, 76/4,5, 77/1A,1B,2B,2C1A,2C1B,2C1C,2C1D,2C1E,2C1F,2C2,3A,3B, 78/1,2 79/1,2, 80/1,2, 81/1,2 82, 83, 85, 86/1B,2A,2B,1C 87/1A,1B1,1B2,2A,2B,2C, 88/1,2,3 89/2,3A,3B,3C,4A,4B, 90 & 95/4 ஆக மொத்தம் 146160,07 ச.மீ நில பரப்பளவு இடத்தில் 212811.83 ச.மீ கட்டிட பரப்பில் அமையும் பலமாடி உத்தேச குடியிருப்புகள் , Club Houses , Shop கட்டிடங்கள் கட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டல அலுவலகம் வழங்கிய திட்ட அனுமதி எண் . கவ / நஊதுஇ (செம) எண் . 65(1 முதல் 33 வரை ) / 2014 ன் படி பெருமாட்டுநல்லூர் ஊராட்சி கட்டிட உரிமை எண் .376 / 14 ன் படி 31.12.2014 முதல் 30.12.2017 வரை அனுமதி வழங்கப்பட்டது. தற்போது அக்கட்டிட பணியானது முழுமை பெறாதக் காரணத்தால் கட்டிட வரைபட அனுமதி நீட்டிப்பு செய்ய தொகுப்பு குடியிருப்பு கட்டுமானங்களுக்கு கட்டிட வரைபடத்திற்கு தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபட அனுமதி / தனி அலுவலர் (செமு) எண் - 67 / 2017 - 2018 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது 28.12.2017 நாள் முதல் 27.12.2019 -ம் நாள் வரை இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.2427855/- (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்து இருபத்தி ஏழாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தி ஐந்து மட்டும் ) செலுத்தியமைக்கான பலவகை ரசீது எண் - 1822 நாள் - 28.12.2017 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

<u>நிபந்தனைகள்</u>

1. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
2. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலே ஆக்கிரமணம் செய்வது கூடாது.
3. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
4. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையறுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
5. புறம்போக்கு மற்றும் இதர அரசுக்குச் சொந்தமான இடங்களில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
6. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் / நிர்வாக அதிகாரிக்கு / தனி அலுவலருக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.
7. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் ( ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் ( அ) கட்டிட வரைபட ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இக்கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும். எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தலைவருக்கு/ தனி அலுவலருக்கு உரிமை உண்டு.
9. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் அவசியம்
10. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்
11. ஊராட்சிக்கு வழங்கப்பட்ட திறவெளி இடத்தினை ஆக்கிரமிப்பு செய்யாமல் திறவெளி இடத்தில் பூங்காக்கள் மற்றும் மரங்கள் அமைத்து நிறுவனத்தினர் தங்கள் சொந்த செலவிலேயே பராமரிக்க வேண்டும்.
12. கட்டிடத்திலிருந்து வரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும்.
13. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படமிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர்செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.
15. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தலைவர் / தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தேதி 28/12/2017

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
பெருமாட்டுநல்லூர் ஊராட்சி.

28/12/17

பெறுநர்
M/S Shriprop Structures Pvt Ltd ,
Lakshmi Neela Rite Choice Chambers,
No.9, Bazullah Road,
T.Nagar, Chennai - 600 017



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate